# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க,
# வான் கலமோட்டுச் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1982, சனவரி மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1982, சனவரி மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 75 தபாற் செலவு : சதம் 50

## 1982 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வான் கலமோட்டுச் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1982, சனவரி மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

45/81

1466

வான் கலமோட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கும், 1979 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விமானநிலைய அதிகாரசபைச் சட்டத்தை நீக்கஞ் செய்வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின் வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வருந் தேதியும்.

1. (1) இச்சட்டமானது 1982 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வான் கலமோட்டுச் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) (அ) இப்பிரிவின் ஏற்பாடுகளும் இச்சட்டத்தின் I ஆம் பாகத்தின் ஏற்பாடுகளும் இச்சட்டம் சட்டமாக்கப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தின் இப்பாகத்தில் "நியமித்த தேதி" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பாகம் I

365 ஆம் அத்தியாயத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) வான் கலமோட்டுச் சட்டத்தின் 20 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அத்தகைய வேறு அலுவலர்கள், மற்றும் சேவையாளர்கள்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வேறு அலுவலர்கள், சேவையாளர்கள் மற்றும் முகவர்கள்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 21அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

3. பின்வரும் புதிய பிரிவானது, 21 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது ; அத்துடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவாகப் பயனுறுதல் வேண்டும் :—

"முகவரை நியமித்தலும் முகவரின் பணிகளும்.

21அ. (1) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், எக்கம்பெனியின் பங்குகளில் தொண்ணூற்றைந்து விதமானவை அரசாங்கத்தினாலும்; எஞ்சிய பங்குகள் தேசிய விமானச் சேவையைத் தொழிற்படுத்துகின்ற கூட்டுத்தாபனம், குழு அல்லது கம்பெனி யொன்றினாலும் வைத்திருக்கப்படுகின்றனவோ அக்கம்பெனியொன்றுகளிருக்கும், கம்பெனிகள் கட்டளைச்சட்

டத்தின்கீழ், பதிவு செய்யப்பட்ட, கம்பெனியொன்றை, பின்வரும் நோக்கங்களுக்காக, அரசாங்கத்தின் முகவரொருவராக நியமிக்கலாம்:—

(அ) வானூர்தி நிலையங்களையும், விமான நிலையங்களையும் அரசாங்கத்தின் சார்பில், அபிவிருத்தி செய்தலும்; பேணுதலும், நிருவகித்தலும்;

(ஆ) அத்தகைய விமானநிலையங்களிலும் வானூர்தி நிலையங்களிலும் விமானநிலைய வசதிகளையும் வானூர்திநிலைய வசதிகளையும் ஏற்பாடு செய்தல்;

(இ) வான் கலமோட்டு சேவைகளையும் வசதிகளையும் ஏற்பாடுசெய்தலும், பேணலும்;

(ஈ) வானூர்தி நிலையங்களில் தீயணைப்புச் சேவைகளை ஏற்பாடுசெய்தல்.

(2) முகவரின் அமைப்புப் பறவிதியிலும் அமைப்பு அக விதிகளிலும் இருப்பது, எது எவ்வாறிருப்பினும் அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் முகவர், அவரது பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்கு அவ்வாறு அகற்றுதல் அவசியமானது அல்லது உசிதமானது என அவருக்குக் தோற்றுகின்றவிடத்து, முகவரின் பணிப்பாளர் சபை உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) அத்தகைய முகவரின் அமைப்புப் புறவிதியும் அமைப்பு அகவிதிகளும் அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் தவிர, திருத்தப்படுதலாகாது. அத்தகைய அங்கீகாரமின்றிச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் திருத்தம் சட்டத்தில் எத்தகைய வலுவோ பயனோ கொண்டதாகாது.

(4) முகவர், அவரது பணிகளைப் புரியவேண்டிய முறை பற்றிய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை அமைச்சர் முகவருக்குக் கொடுக்கலாம்; அத்துடன், அத்தகைய பணிப்புரைகளுக்கிணங்கியொழுகுதல் அத்தகைய முகவரின் கடமையாதல் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவினால் அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி அமைச்சர்—

(அ) தேசிய பாதுகாப்பு நலன்களுக்காக; அல்லது

(ஆ) வேறு ஏதேனும் நாட்டுடன் அல்லது ஆள்புலத்துடன் குடியரசு கொண்டுள்ள உறவுகளைப் பாதிப்பதென அமைச்சருக்குத் தோற்றும் ஏதேனும் கருமம் தொடர்பில்; அல்லது

(இ) சருவதேசிய ஒழுங்கமைப்பொன்றன் உறுப்பினரொருவராக அல்லது சருவதேசிய உடன்படிக்கையொன்றுக்கான திறத்தவரொருவராக இருக்கின்ற தன்மையினுல், குடியரசைப் பிணிக்கின்ற கடப்பாடொன்றை நிறைவேற்றுவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்கு வசதியளிப்பதற்காக ; அல்லது

(ஈ) குடியரசானது சருவதேசிய ஒழுங்கமைப்பொன்றன் உறுப்பினரொருவராக அல்லது சருவதேசிய உடன்படிக்கையொன்றுக்கான திறத்தவரொருவராக இருக்கின்றது என்னும் நிகழ்வு காரணமாக, வேறு எக்குறிக்கோளை எய்துதல் அமைச்சரின் அபிப்பிராயப்படி தோதானதாகவுள்ளதோ அக்குறிக்கோள் எதனையும் எய்துவதற்காக அல்லது எய்துவதற்கு வசதியளிப்பதற்காக ; அல்லது

(உ) சருவதேசிய ஒழுங்கமைப்பொன்றன் உறுப்பினர் ஒருவராக அல்லது சருவதேசிய உடன்படிக்கையொன்றுக்கான திறத்தவரொருவராக குடியரசு வருவதனை இயலச்செய்வதற்காக,

அத்தகைய பணிப்புரைகளைக் கொடுப்பது தோதானதென அவர் கருதினுல், முகவர் செய்வதற்குத் தத்துவமுள்ள ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யுமாறு அல்லது குறிப்பிட்ட செயலொன்றைச் செய்யாதுவிடுமாறு, முகவருக்குப் பணிப்புரைகள் வழங்கலாம்.

(6) (அ) ஏதேனும் விமானநிலையத்தின் அல்லது வானூர்தி நிலையத்தின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துவதிலும் ;

(ஆ) ஏதேனும் அத்தகைய விமானநிலையத்தில் அல்லது வானூர்திநிலையத்தில், ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் பயன்பாட்டுக்காய வசதிகளைக் குறித்தொதுக்குவதிலும்,

முகவர், அமைச்சருடனுன ஆலோசனையின் பின்னர், செயலாற்றுதல் வேண்டும்.

(7) முகவரானவர், ஏதேனும் வானூர்திக்கு ஏதேனும் விபத்து ஏற்படும் பட்சத்தில் அல்லது வான் கலமோட்டு உதவிச் சாதனங்கள் எவற்றுடனும் எவ்வகையாகவேனும் தலையிடும்பட்சத்தில் அல்லது அவற்றுக்குச் சேதம் விளைவிக்கப்படும் பட்சத்தில், அக்கருமங்கள் பற்றி அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டும்.

(8) முகவர் அவரது பணிகளை நிறைவேற்றுவதனை இயலச்செய்யும் நோக்கத்துக்காக, அமைச்சரானவர் அவரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய நியதிகளின்மீதும் நிபந்தனைகளின்மீதும், சிவில் வான் செலவுப் பணிப்பாளருக்கு உரித்தாக்கப்பட்டவாறுன அத்தகைய ஏதேனும் அசைவற்ற மற்றும் அசைவுள்ள ஆதனத்தின் பயன்பாட்டையும் கட்டுப்பாட்டையும் அத்தகைய முகவருக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யலாம்.

(9) முகவரானவர் (8) ஆம் உட்பிரிவின்கீழ், அவருக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட்ட எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களையும் நல்ல நிலையில் பேணிவருதல் வேண்டும்; அத்துடன் அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரமில்லாது, ஏதேனும் அத்தகைய ஆதனத்தை மாற்றியமைத்தல் அல்லது மாற்றுதல் ஆகாது அல்லது அதன்கணுள்ள ஏதேனும் அக்கறையைக் கையுதிர்த்தல் ஆகாது அல்லது அதன்கணுள்ள எவையேனும் ஓடுபாதைகளை, வாடகைக் கார்ப் பாதைகளை, கடுந்தரைப் பாப்புகளை, கட்டிடங்களை, மற்றும் வானூர்திக் கொட்டகையைக் கட்டியமைத்தல் ஆகாது.

(10) உண்மையாகப் போர் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அல்லது ஏற்படும் வாய்ப்பு அண்மித்துள்ள காலத்தில் அல்லது தேசிய அவசரகாலநிலைமையுள்ள காலத்தில், (8) ஆம் உட்பிரிவின்கீழ், முகவருக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட்ட ஏதேனும் ஆதனம் அமைச்சர் வசம் விட்டுவைக்கப்பட வேண்டுமெனக் கட்டளைமூலம் அமைச்சர் தேவைப்படுத்தலாம்; அத்துடன் அத்தகைய கட்டளை வலுவிலுள்ளபோது, அத்தகைய ஆதனத்தை முகாமைசெய்தல் தொடர்பில் அமைச்சர் பொருத்தமானதெனக்கருதும் அத்தகைய பணிப்புரைகளை முகவருக்கு அவர் வழங்கலாம்; அத்துடன், அத்தகைய பணிப்புரைகளுக்கிணங்கியொழுகுதல் முகவரின் கடமையாதல் வேண்டும்.

(11) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினல் வெளிப்படுத்தப்படும்வாறுன (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளைத் தேதியன்று வான்கலமோட்டுதல் தொடர்பாக இருந்துவருவனவான அரசாங்கத்தின் அத்தகைய எல்லா ஒப்பந்தங்களும், கடப்பாடுகளும் பொறுப்புக்களும், முதலாவதாகக் கூறப்பட்ட கட்டளைத் தேதியிலிருந்து முகவரின் ஒப்பந்தங்களாகவும் கடப்பாடுகளாகவும் பொறுப்புக்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(12) முகவரொருவரை அத்தகைய முகவராக நியமிக்கின்ற தேதிக்குப் பின்னர் அம்முகவரினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒவ்வொன்றும், அத்தகைய ஒப்பந்தத்தின் நியதிகளில் முரணான வெளிப்படையான ஏற்பாடு இருந்தாலொழிய, அம் முகவரினால், அரசின் சார்பிலன்றி, அவரது சொந்தச் சார்பில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அரசைப் பிணிப்பதாகக் கருதப்படுதலுமாகாது.

(13) முகவரின் பணிகளை நிறைவேற்றுகையில் அல்லது நிறைவேற்றுகையாகக் கொள்ளப்படுகையில், அம் முகவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எதனதும் தொடர்பில் அரசுக்கெதிராக வழக்கு நடவடிக்கை எதுவும் இருத்தல் ஆகாது.

(14) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 12, 13, 14, 15 ஆகிய பிரிவுகள், முகவரின் மூலதனச் செலவினத்துக்கென பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் தொடர்பிலான கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாகும்.

(15) அமைச்சர், எழுத்திலான அறிவித்தல்மூலம், அவ்வறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அதன் நிதிகள் தொடர்பிலான அத்தகைய தகவலை, தமக்குக் கொடுத்துதவுமாறு முகவரைத் தேவைப்படுத்தலாம்; அத்துடன் அவ்வறிவித்தலின் தேவைப்பாட்டுக்கிணங்கியொழுகுதல் அம்முகவரின் கடமையாதல் வேண்டும்; அத்துடன் முகவர் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டு முடிவிலும்—

(அ) அவ்வாண்டின்போது அதன் வேலை பற்றிய அறிக்கையொன்றையும்; அத்துடன்

(ஆ) அவ்வாண்டுக்கான அதன் வரவு-செலவுத் திட்டம், ஐந்தொகை, இலாப நட்டக் கணக்கு என்பவற்றின் பிரதிகளையும்,

அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(16) ஓராமுட்பிரிவின்கீழ், முகவரொருவர் நியமிக்கப்பட்டதன் காரணமாக, (ஒன்றிணைந்த சேவைக் குறிப்புக்களின்கீழ், இடமாற்றஞ்செய்யப்படுவதற்கு ஆளாகும் அரசாங்கத்தின் ஒன்றிணைந்த சேவை அலுவலர் ஒருவர் தவிர்ந்த) எவரேனும் பகிரங்க அலுவலரின் சேவைகள் சிவில் வான்செலவுத் திணைக்களத்தில் இனிமேல் தேவைப்படமாட்டாவென தோதான அதிகாரி திருப்தியுறுகின்றவிடத்து, அவர், அப்பகிரங்க அலுவலரினால் வகிக்கப்பட்டுவந்த பதவியை ஒழித்துவிடலாம் :

ஆயின், முகவரை நியமித்ததன் காரணமாக, ஒன்றிணைந்த சேவையிலுள்ள அலுவலரின் சேவைகள் சிவில் வான்செலவுத் திணைக்களத்தில் இனிமேல் தேவைப்படமாட்டாவென தோதான அதிகாரி திருப்தியுற்றால், தோதான அதிகாரி, அரசாங்கத்தின் ஒன்றிணைந்த சேவையின் அலுவலர் ஒருவராகவும், அவ்வொன்றிணைந்த சேவை தாபிக்கப்படும் தேதிக்கு முன்னரிருந்து சிவில் வான்செலவுத் திணைக்களத்தில் தொடர்ச்சியாகச் சேவையாற்றியுள்ளவராகவும் இருக்கும் எவரேனும் பகிரங்க அலுவலரினால் வகிக்கப்பட்ட பதவியை ஒழிக்கலாம்.

(17) பதினாறும் உட்பிரிவின்கீழ் எப்பகிரங்க அலுவலரின் பதவி ஒழிக்கப்பட்டதோ, அப்பகிரங்க அலுவலரினால் வகிக்கப்பட்ட பதவி, ஓய்வூதியம் பற்றிய குறிப்புக்களின்கீழ், ஓய்வூதியத்துக்குரித்துடையதென வெளிப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, பதவி ஒழிக்கப்பட்டதன் காரணமாக பகிரங்க சேவையிலிருந்து அவர் இளைப்பாறியிருந்தால் ஓய்வூதியம் பற்றிய குறிப்புக்களின்கீழ் எவ்வூதியம் அல்லது பணிக்கொடை கொடுக்கப்பட்டிருப்பாரோ அவ்வூதியம் அல்லது பணிக்கொடையைப் பெறுவதற்கு அவ்வலுவலர் உரித்துடையவராதல் வேண்டும்.

(18) பதினாறும் உட்பிரிவின்கீழ் எப்பகிரங்க அலுவலரின் பதவி ஒழிக்கப்பட்டதோ அப்பகிரங்க அலுவலர் எவரும் குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவை புரிவதற்கான ஒரு முறியின்கீழ் அல்லது உடன்படிக்கையின்கீழ் இருக்கின்றவிடத்து, முகவரின் பணியாட்டொகுதியில் அவரால் ஆற்றப்படும் ஏதேனும் சேவை, அம்முறியை அல்லது உடன்படிக்கையை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக, அரசாங்கத்துக்கு ஆற்றப்படும் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், எவரேனும் அத்தகைய அலுவலருக்கு முகவரின் பணியாட்டொகுதியில் தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டிருந்து, அவர் அத்தகைய வாய்ப்பை ஏற்றுக்கொள்ளாதுவிட்டால், அத்தகைய முறியின் அல்லது உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக, அத்தகைய முறியின் அல்லது உடன்படிக்கையின்கீழ் நிறைவேற்றப்படாச் சேவைக் காலப்பகுதி எதனதும் தொடர்பில், அத்தகைய முறியின் அல்லது உடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்கக் கணிக்கப்படும் பணத்தொகையொன்றை அரசாங்கத்துக்குக் கொடுப்பதற்கு அவர் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(19) (அ) முகவரினது வேண்டுதலின்பேரில், (16) ஆம், (17) ஆம் உட்பிரிவுகள் ஏற்புடையனவாகும் பகிரங்க அலுவலர் ஒருவர் தவிர்ந்த, பகிரங்க அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும் சிவில் வான்செலவு என்னும் விடயத்துக்கு அப்போதைக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாள ரினதும் சம்மதத்துடன், அதையொத்த சம்மதத்துடன் முகவரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்த கைய காலப்பகுதிக்கு முகவரின் பணியாட்டொகு திக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(ஆ) பகிரங்க அலுவலர் ஒருவர் முகவரின் பணியாட் டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையன வாகும்.

(இ) பகிரங்க அலுவலர் ஒருவர் முகவரின் பணி யாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையன வாகும்.

(20) விமானநிலையங்களை அல்லது எவையேனும் கலமோட்டுச் சேவைகளை அல்லது வசதிகளை அபி விருத்தி செய்வதற்காக முகவரினால் இறக்குமதி செய் யப்படும் ஏதேனும் மூலதன உபகரணத்தின்மீது சுங்கத் தீர்வை எதனையும் கொடுப்பதிலிருந்து அவர் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவானது, "இச் சட்டத் தினை" என்னும் சொற்களுக்குப்பதிலாக, "முகவரது பணிகளை நிறை வேற்றுவதில் முகவரினால் உறப்பட்ட செலவுகள் தவிர்ந்த இச்சட்டத் தினை" எனுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவின் மாற்றீடு.**

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"கட்டணங்கள் முதலியன திரட்டு நிதியத்துட் செலுத்தப்படுதல்.

23. (1) இச்சட்டத்தின்கீழ் கட்டணங்கள், இறுப் பனவுகள் அல்லது குற்றப்பணங்கள் வகையாக செலுத் தப்படும் அல்லது அறவிடப்படும் எல்லாப் பணத் தொகைகளும், (3) ஆம் உட்பிரிவுக்கமைவாக, திரட்டு நிதியத்துட் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, இச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் அல்லது அறவிடப்படும், அத்தகைய கட்டணங்களை, வாடகைகளை, வரிகளை அல்லது வேறு இறுப்பனவுகளை, முகவர், அரசாங்கத்தின் சார்பில், சேகரித்தல் அல்லது அறவிடுதல் வேண்டும்.

(3) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படும்வாறான அரசாங்கத்தின் சார்பில், அவரினால் சேகரிக்கப்படும் அல்லது அறவிடப்படும் கட்டணங்களின், வரிகளின் அல்லது இறுப்பனவுகளின் அத்தகைய பாகத்தை முகவர், அவரது பணிகளை நிறைவேற்றுகையில் அவரால் ஏற்பாடு செய்யப்படும் சேவைகளுக்கான கட்டணங்களாக பிடித்து வைத்திருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) "வானூர்தி நிலையம்" என்பதன் வரைவிலக்கணத்தை நேரேயுடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

' "முகவர்" என்பது, 21 அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகவர் ஒருவர் என்று பொருளாகும்;';

(ii) "வானூர்தி" என்பதன் வரைவிலக்கணத்தை நேரேயுடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும் :—

' "வான் கலமோட்டுச் சேவைகள்" என்பது, கலமோட்டுத் துணைக்கருவிகள் எனவும் கலமோட்டு வசதிகள் எனவும் பொருளாகும் ;

"விமான நிலையம்" என்பது, வானூர்தியை பாதுகாப்பான நிலையில் வைத்திருப்பதற்கும் அவற்றின் சீர்காப்பிற்கும் அல்லது அவற்றைப் பழுது பார்ப்பதற்கும், பயணிகளை அல்லது கப்பற் சரக்கை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் என எந்த வானூர்தி நிலையத்தில் வசதிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றனவோ அந்த வானூர்தி நிலையம் என்று பொருளாகும் என்பதுடன் கெலிக்கொப்ரர் நிலையமொன்றையும் உள்ளடக்கும் ;

"வான் செலவுக் கட்டுப்பாடு" என்பது,—

(அ) (i) வானூர்திகளிடையேயும், அத்துடன்

(ii) வானூர்திகளுக்கும் தடைகளுக்கும் இடையே உள்ள இயக்க இடப்பரப்பின் மீது,

மோதல்களைத் தடுக்கும் நோக்கத்துக்காகவும் ; அத்துடன்

(ஆ) வான் போக்குவரத்தைத் துரிதப்படுத்தும் நோக்கத்துக்காகவும் கிரமமான வான் செலவு முறையைப் பேணும் நோக்கத்துக்காகவும்,

ஏற்பாடு செய்யப்படும் ஒரு சேவை என்று பொருளாகும்;';

(iii) "உரிமமளிக்கப்பட்ட வானூர்தி நிலையம்" என்பதன் வரைவிலக்கணத்தை நேரேயுடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும் :—

'"தேசிய விமான சேவை" என்பது, அப்போதைக்கு இலங்கையின் தேசிய வானூர்தி என பெயர் குறிக்கப்பட்ட விமான சேவை என்று பொருளாகும் ;

"கலமோட்டுத் துணைக் கருவிகள்" என்பது, வான் மார்க்க வழியாகவுள்ள காட்சி சார்ந்த, காட்சிசாரா கலமோட்டுத் துணைக் கருவிகள், வானூர்தி நிலையங்களிலுள்ள நுழைவாயிலிலும் தரையிறங்கிடத்திலும் உள்ள காட்சிசார்ந்த, காட்சிசாராத் துணைக் கருவிகள், தொடர்புச் சேவைகள், வானிலையாய்வுச் சேவைகள், வான் செலவுக் கட்டுப்பாட்டுச் சேவைகள் என்று பொருளாகும் ;

"கலமோட்டு வசதிகள்" என்பது, வானூர்திகளின் பாதுகாப்பான கலமோட்டலை அனுமதிப்பதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட வசதிகள் என்று பொருளாகும் என்பதுடன், காட்சிசார்ந்த, காட்சிசாராக் கலமோட்டுத் துணைக்கருவிகளையும் உள்ளடக்கும்.'.

## பாகம் II

7. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விமான நிலைய அதிகாரசபைச் சட்டம் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது. *1979 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்கஞ் செய்தல்.*

இப்பிரிவிலும், 8 ஆம் பிரிவிலும் "விமான நிலைய அதிகாரசபை" என்பது, 1979 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட விமானநிலைய அதிகாரசபை என்று பொருளாகும்.

8. (அ) நியமித்த தேதிக்கு நேர் முந்திய நாளன்று விமான நிலைய அதிகாரசபையின் உடைமையிலும் கட்டுப்பாட்டிலும் உள்ள அசைவற்ற மற்றும் அசைவுள்ள ஆதனம் யாவும் சிவில் வான் செலவுப் பணிப்பாளருக்கு மாற்றப்படுதலும் உரித்தாதலும் வேண்டும் ; *நிலைபெயர்கால ஏற்பாடுகள்.*

(ஆ) நியமித்த தேதிக்கு முன்னர் விமான நிலைய அதிகாரசபையினால் உறப்பட்டனவும் நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருந்து வருகின்றனவுமான எல்லாக் கடன்களும், கடப்பாடுகளும், பொறுப்புக்களும், அவ்வதிகாரசபையினால் நிறைவேற்றப்பட்டனவும் அல்லது செய்து கொள்ளப்பட்

டனவும் நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருந்து வருகின்றனவுமான எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், உடன்படிக்கைகளும் ஏனைய சாதனங்களும், அவ்வதிகார சபையினால் செய்யப்படவேண்டுமென ஈடுபட்டனவும் நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருந்து வருகின்றனவுமான எல்லாக் கருமங்களும் விடயங்களும் வான்கலமோட்டுச் சட்டத்தின் 21அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகவரினால் அல்லது முகவருடன், விடயத்துக்கேற்றுற்போல கூறப்பட்டிருப்பதாக, நிறைவேற்றப்பட்டிருப்பதாக, செய்து கொள்ளப்பட்டிருப்பதாக அல்லது செய்வதற்கு ஈடுபட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) விமானநிலைய அதிகாரசபையினால் அல்லது அவ்வதிகார சபைக்கெதிராகத் தொடுக்கப்பட்டனவும் நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறுதிருப்பனவுமான எல்லா வழக்குகளும் ஏனைய நடவடிக்கைகளும், வான்கலமோட்டுச் சட்டத்தின் 21அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகவரினால் அல்லது முகவருக்கெதிராக தொடுக்கப்படும் வழக்குகளாகவும் நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வழக்கு அல்லது நடவடிக்கை ஒவ்வொன்றும் அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படலாம், அத்துடன் வலியுறுத்தப்படலாம்;

(ஈ) நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று விமான நிலைய அதிகாரசபையின் சேவையிலுள்ள எல்லா அலுவலர்களும் ஏனைய ஊழியர்களும் விமான நிலைய அதிகாரசபையின் ஊழியர்களாக இல்லாதொழிதல் வேண்டும், அத்துடன், வான் கலமோட்டுச் சட்டத்தின் 21அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகவரின்கீழ் வேலைவாய்ப்பு வழங்கப்படாவிட்டால், அவ்வூழியர்கள், அவர்களது கடந்தகால சேவைகளையும் நட்டஈட்டையும் பணிக்கொடையையும் தீர்மானிப்பதற்கு இயைபானதாய ஏனைய கருமங்களையும் கருத்துக்கெடுத்து அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நட்டஈட்டு, மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர்களாதல் வேண்டும்.